எண். 62/2025 நாள்: 29.05.2025

**தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

**எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை - 600 003**

**செய்தி வெளியீடு**

ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) (அறிவிக்கை எண். 09/2024, நாள் 26.07.2024 மற்றும் அதன் பிற்சேர்க்கைகள்) தேர்வில் தேர்வர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் 20.02.2025 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

கீழ்கண்ட பதவிகளுக்கான மூன்றாம் கட்ட மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், எண்.3, தேர்வாணையச் சாலை, (பிராட்வே பேருந்து நிலையம் மற்றும் கோட்டை ரயில் நிலையம் அருகில்) சென்னை-600 003ல் உள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

| | |
|---|---|
| **மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு நாள் 05.06.2025** | உதவி நிலத்தியலாளர் (பதவிக் குறியீடு 1750, 1677, 1863), உதவி நீரியல் நிபுணர் ( பதவிக் குறியீடு 3530) . |
| **மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மட்டும் நாள் 05.06.2025** | வேளாண் அலுவலர் (விரிவாக்கம்) (பதவிக் குறியீடு - 1678), கட்டட வடிவமைப்பு உதவியாளர் / திட்டமிடல் உதவியாளர் (பதவிக் குறியீடு 2108), உதவி இயக்குநர் (பதவிக் குறியீடு 1664), உதவி பொறியாளர் (தொழிற்சாலை) (பதவிக் குறியீடு - 1900), மருந்து ஆய்வாளர் (பதவிக் குறியீடு 1972) இளநிலை கட்டட வடிவமைப்பாளர் (பதவிக்குறியீடு - 1860), உதவி மேலாளர் (பதவிக் குறியீடு 3349), செயல் நிலத்தியலாளர் (பதவிக் குறியீடு 3385), துணை மேலாளர் (அமைப்பு) (பதவிக் குறியீடு 3278), துணை மேலாளர் (பால் பண்ணை) (பதவிக் குறியீடு 3279), துணை மேலாளர் (தர நிர்ணயம்) (பதவிக் குறியீடு 3348), உதவி காப்பாட்சியர் (விலங்கியல்) (பதவிக் குறியீடு 2131), உதவி காப்பாட்சியர் (தேசிய கலைக்கூடம்) (பதவிக் குறியீடு 2133), உதவி காப்பாட்சியர் (தாவரவியல்) (பதவிக் குறியீடு 2132), உதவி காப்பாட்சியர் (மானுடவியல்) (பதவிக் குறியீடு 2130), வேதியியலாளர் (பதவிக் குறியீடு 3370), உதவி மேலாளர் சேமிப்பு கிடங்கு / இளநிலை உதவியாளர் (பதவிக் குறியீடு 3388), காப்பாட்சியர் (பதவிக் குறியீடு 2129). |

தேர்வர்களின் மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை எண்/இடஒதுக்கீட்டு விதி / காலிப்பணியிடங்களின் அடிப்படையில் மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் தற்காலிக தேர்வர்களின் பட்டியல் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான நாள், நேரம் மற்றும் விவரங்கள் அடங்கிய அழைப்புக்குறிப்பாணையினை தேர்வர்கள் தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in – லிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு அழைக்கப்பட்ட தேர்வர்களுக்கு அதற்கான விவரம் SMS மற்றும் E-mail மூலம் மட்டுமே தெரிவிக்கப்படும். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கான / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கான அழைப்பாணை தனியே தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்பட்ட தேர்வர்கள் எழுத்துதேர்வில் அவரவர் பெற்ற மதிப்பெண்கள் / ஒட்டுமொத்த தரவரிசை / இடஒதுக்கீட்டு விதிகள் / விண்ணப்பத்தில் அளித்துள்ள தகவல்கள் மற்றும் காலிப்பணியிடங்களுக்கு ஏற்ப மேற்படி பதவிகளுக்கான தெரிவு மேற்கொள்ளப்படும். எனவே, மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படும் அனைவருக்கும் பணி வழங்கப்படும் என்பதற்கான உறுதி அளிக்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்வர்கள் மேற்படி மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு / மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பிற்கு வரத்தவறினால் அவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ச.கோபால சுந்தர ராஜ். இ.ஆ.ப.,
செயலாளர்